அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80** (எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 03.06.2023** | **பக்கங்கள்: 20** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. பகுசொல் உறுப்புகளுள் பால் காட்டுவது
   1. பகுதி
   2. விகுதி
   3. இடைநிலை
   4. சந்தி

2. பலா என்பது
   1. இடுகுறிச் சிறப்புப்பெயர்
   2. காரணப்பெயர்
   3. இடுகுறிப் பொதுப்பெயர்
   4. காரண இடுகுறிப்பெயர்

3. நிகழ்காலப் பெயரெச்சமாக வருவது
   1. பாடி
   2. ஆடுகின்ற
   3. நடித்து
   4. எழுதிய

4. தாம் பார்த்த அல்லது படித்த ஒன்றைப்பற்றி ஆய்ந்து கூறுவது
   1. புதுக்கவிதை
   2. புதினம்
   3. மரபுக்கவிதை
   4. திறனாய்வு

5. சிங்கம் பசியால் புள்ளிமான்களை வெறியோடு துரத்தியது. இச்சொல்லியத்தில் செயப்படுபொருள் அடைமொழி
   1. புள்ளி
   2. வெறியோடு
   3. பசியால்
   4. மான்கள்

6. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற பழமொழியின் கருத்து
   1. உழைக்காமல் வாழ்ந்தால் உயர்வில்லை
   2. போட்டி வளர்ச்சியைத் தரும்
   3. முயற்சியற்ற கற்பனை பயனற்றது
   4. போட்டி வளர்ச்சியைத் தடுக்கும்

7. 14.08.2006இல் சிங்கள வான்படையினரால் தாயகத்தில் தாக்குதலுக்கு உள்ளான இடம்
   1. யாழ்ப்பாணப் பொதுநூலகம்
   2. செஞ்சோலை வளாகம்
   3. கொக்கட்டிச்சோலை
   4. வெலிக்கடைச் சிறைச்சாலை

8. தமிழ்விழி இலக்கிய ஒன்றுகூடலைச் சிறப்பாக நடத்தினாள். இச்சொல்லியம்
   1. தன்வினை
   2. பிறவினை
   3. எதிர்மறைவினை
   4. செயப்பாட்டுவினை

9. ஈருடல் என்பதைப் பிரித்தெழுதினால்
   1. ஈர் + உடல்
   2. இரு + உடல்
   3. ஈரு + உடல்
   4. இரண்டு + உடல்

10. ஒரு செய்யுளின் முடிவு அடுத்த செய்யுளின் தொடக்கமாக வரத் தொடுப்பது
   1. அறம்பாடுதல்
   2. சிலேடை
   3. அந்தாதி
   4. கலம்பகம்

11. அருண்மொழித்தேவன் என்ற தமிழ்ப்பெயரைச் சமற்கிருதப் பெயராக மாற்றிய சோழமன்னன்
   1. விசயாலயன்
   2. இராசேந்திரன்
   3. குலோத்துங்கன்
   4. இராசராசன்

12. இலக்கியவகைப் பாகுபாட்டுச் சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. அகம்
   2. தவ
   3. மூடினாள்
   4. தோறும்

13. நாட்டுப்புற அடிப்படைப் பாகுபாட்டைக் கொண்ட சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   1. மும்மணிமாலை
   2. அம்மானை
   3. பதிகம்
   4. கும்மி

1 2 3 4

14. அரசன், கணவன், வீடு என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    1. கவி
    2. அணி
    3. பதி
    4. அணங்கு

15. புலம்பெயர்ந்தோர் தமது குடும்பத்துக்காக ஓடியோடி உழைக்கின்றனர். ஓடியோடி என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இணைமொழி
    3. இரட்டைக்கிளவி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

16. நாய் குரைக்கும் அதுபோல யானை
    1. கனைக்கும்
    2. பிளிறும்
    3. கத்தும்
    4. ஊளையிடும்

17. நெய்தல் நிலத்துக்குரிய அகத்திணை ஒழுக்கம்
    1. இரங்கல்
    2. பிரிதல்
    3. ஊடல்
    4. புணர்தல்

18. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ப்பணி ஆற்றிய தமிழ்ச் சான்றோர்களுள் ஒருவர்
    1. தாயுமானவர்
    2. வீரமாமுனிவர்
    3. மீனாட்சி சுந்தரம்பிள்ளை
    4. கார்டுவெல்

19. பனைக்கை என்பது
    1. பண்புத்தொகை
    2. உம்மைத்தொகை
    3. உவமைத்தொகை
    4. வினைத்தொகை

20. கை + நூல் என்பதைப் புணர்த்தினால்
    1. கைம்நூல்
    2. கைந்நூல்
    3. கைனூல்
    4. கைநூல்

1 2 3 4

21. சங்ககாலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
    1. கார்நாற்பது
    2. முக்கூடற்பள்ளு
    3. பன்னிரு திருமுறைகள்
    4. கூத்தராற்றுப்படை

22. மெய் முன் மெய் புணர்ந்த சொல்
    1. முட்செடி
    2. உறவுப்பாலம்
    3. மழைக்காடு
    4. வாழிடம்

23. தமிழில் கையாளப்படும் ‘கைக்கூ’ என்ற கவிதை வடிவத்துக்குரிய நாடு
    1. பிரித்தானியா
    2. இத்தாலி
    3. யப்பான்
    4. பிரான்சு

24. மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கூட்டம்
    1. அ, இ, உ
    2. ங, ண, ளி
    3. மி, ச, யா
    4. நு, ப, கு

25. பரணி இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது
    1. தக்கயாகப்பரணி
    2. இரணியவதைப்பரணி
    3. அஞ்ஞாதவதப்பரணி
    4. கலிங்கத்துப்பரணி

(25 x 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புறத்திணை இலக்கியங்களில் கூறப்பட்ட போர் அறங்களுள் இரண்டு எழுதுக.

___

___

2. யாருடைய வருகைக்குப் பின் ஈழத்தில் சிங்கள இனம் உருவாகியது? அவர் எங்கிருந்து வந்தார்?

___

___

3. புலம்பெயர் பெண் எழுத்தாளர்களின் படைப்புகளின் உள்ளடக்கங்களாக அமைந்தவற்றுள் இரண்டினை எழுதுக.

___

___

4. ‘வைர அட்டிகை’ எனும் கதை மூலம் நாம் வாழ்வில் எதனைச் செய்யக்கூடாது என்ற உண்மை விளக்கப்படுகிறது?

___

___

5. குற்றியலுகரத்தின் முன் உயிர் புணர்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

___

___

6. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுச் சொல்லியம் எழுதுக.

இடவாகுபெயர்: ___

___

குணவாகுபெயர்: ___

___

7. செய்வினைச் சொல்லியம் ஒன்றை எழுதி, அதனைச் செயப்பாட்டுவினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

செய்வினைச் சொல்லியம்:________________________________

________________________________

செயப்பாட்டுவினைச் சொல்லியம்: ________________________________

________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மரணித்தும் வாழ்வோரே! மாவீரரே!

**2.**



________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

(5 புள்ளிகள்)

**4. பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

மாந்த வாழ்வில் முதுமையும் இறப்பும் தவிர்த்துக்கொள்ள முடியாதவை. அறுபது அகவைக்கு மேற்பட்டவர்களை முதியோர் எனலாம். உலக மக்கள் தொகையானது நாளுக்குநாள் அதிகரித்தபடியே இருக்கிறது. இவ்வாறு அதிகரிக்கும் மக்கள் தொகையில் முதியோர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இன்று உலக மக்கள் தொகையில் காற்பங்கினர் முதியோர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கணிப்பீட்டுப் புள்ளித் தரவுகள் காட்டுகின்றன. தனிமையும் புறக்கணிப்பும் முதியோர்களைப் பெருமளவில் பாதிக்கின்றன. பல குடும்பத்தினர், முதியவர்கள் எதற்கும் பயனில்லாதவர்கள் என்று அவர்களை ஒதுக்கி விடுகிறார்கள். ஆனால், முதியோரது வாழ்நாள்களில் பெற்ற பட்டறிவுகள் இளையோர்களை வழிநடத்தப் பயன்படும் என்பதை இத்தகைய குடும்பத்தினர் உணரத் தவறி விடுகிறார்கள். ‘முதியோரை மதித்தல் கடவுளை மதித்தல்’ என்பது பல்கேரிய நாட்டுப் பழமொழி. முதியோர் ஒரு குடும்பத்தில் அச்சாணி போன்றவர்கள். எம்மைக் கருவிலும் தோளிலும் சுமந்தவர்களைப் புறந்தள்ளலாமா? முதியோரைப் பேணுவது தமிழரது பண்பாடுகளுள் ஒன்று. அக்டோபர் முதலாம் நாளை அனைத்துலக முதியோர் நாளாக ஐ.நா. அறிவித்துள்ளது. இன்றைய இளையவர்களான நாங்கள் நாளைய முதியோர் என்பதை மனத்தில் கொண்டு முதியோரைப் பேணுவோம்.

(5 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிடமொழியில் வாசித்து, தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

Many Tamils from Tamil Eelam migrated to European countries after 1980s. The reason for this is the genocide against the Tamil people carried out by the Sinhalese government. The genocide against the Tamil people was validated by the verdicts delivered by a people tribunal in Bremen, Germany. This genocide destroyed the lives and caused immense hardship to university students, men, woman, children, and elderly. Many lost their homes and livelihoods. They could not live there. Due to this situation, first, Eelam Tamils displaced to India. Then they migrated and live in Europe, Canada, America, and Australia.

**யேர்மனி:**

Nach den 1980er wanderten viele Eelam-Tamilen in europäische Länder ein. Der Grund dafür ist der durch die singalesische Regierung durchgeführte Völkermord an die tamilische Bevölkerung. In der deutschen Stadt Bremen bestätigte das Bürgertribunal mit ihrem Urteil den Völkermord an die tamilische Bevölkerung. Als Folge dieses Völkermordes litten Studenten, Männer, Frauen, Säuglinge und Senioren sehr. Viele verloren ihren Wohnsitz. Es entstand eine Situation, in der sie dort nicht leben konnten. Daher wanderten die Eelam-Tamilen erstmal nach Indien aus. Später wanderten sie in Länder wie Europa, Kanada, Amerika, Australien aus und leben dort.

**நோர்வே:**

Mange Eelam-tamilere flyttet til europeiske land etter 1980-tallet. Årsaken var folkemordet mot tamilene av den singalesiske regjeringen. Folkemordet mot tamilene ble erkjent av en folkedomstol i Bremen i Tyskland. Universitetsstudenter, menn, kvinner, barn og eldre led enormt av folkemordet. Mange mistet hjemmet sitt. De havnet i en situasjon hvor de ikke kunne leve der. På grunn av situasjonen reiste mange eelam-tamilere til India. Deretter flyktet de og bosatte seg i Europa, Canada, Amerika og Australia.

**இத்தாலி:**

Molti Eezham Tamil dopo gli anni 80 emigrarono verso i paesi europei. A causa del genocidio perpetrato dal governo cingalese contro il popolo Tamil. Il Tribunale Permanente dei Popoli riunitosi a Bremen in Germania ha riconosciuto il genocidio del popolo Tamil. A causa di questo genocidio tutti ne hanno patito diverse sofferenze: studenti universitari, uomini, donne, bambini e anziani. Molti hanno perso le loro proprietà. Gli è diventato impossibile vivere là. Perciò gli Eezham Tamil inizialmente emigrarono verso l’India. Successivamente emigrarono in stati come Europa, Canada, America e Australia.

**நெதர்லாந்து:**

Na 1980 emigreerden veel Eelam Tamils naar Europese landen. De reden hiervoor is genocide uitgevoerd door de Singalese politieke regering tegen de Tamils. De Volksrecht in de Duitse stad Bremen bevestigd de genocide tegen de Tamilbevolking. Veel universiteit studenten, mannen, vrouwen, kinderen en ouderen hebben veel geleden door deze genocide. Velen verloren hun huis. Het werd voor hen onmogelijk om daar te wonen. Hierdoor, migreerden veel Eelam Tamils eerst naar India. Later migreerden ze naar landen als Europa, Canada, Amerika en Australië.

**டென்மார்க்:**

Efter 1980'erne flygtede mange eelamtamiler til europæiske lande. Årsagen til dette var den etniske udrensning af det tamilske folksom den singalesiske regering stod bag. Dommen fra Folkedomstolen i Bremen i Tyskland har også bekræftet folkedrabet af det tamilske folk. På grund af . dette folkedrab led både universitetsstuderende, mænd, kvinder, børn og ældre. Mange mistede deres hjem. Det blev umuligt for dem at bo der. Derfor udvandrede/ flygtede tamilerne først til Indien. Senere har udvandrede/ flygtede de for eksempel til Europa,  Canada, Amerika og Australien.

**சுவீடன்:**

Flera eelatamiler emigrerade till Europa efter 1980. Orsaken till detta var den etniska rensning som den singalesiska staten utsatte det tamilska folket för. Folkets domstol i den tyska staden Bremen erkänner folkmordet som den tamilska folket utsattes för. Av denna etniska rensning hat universitetsstudenter, män, kvinnor, barn och äldre lidit myvket. Flera förlorade sina hem. För dem uppstod det en icke leverbar livssituation. På grund av detta emigrerade eelatamiler först till Indien. Sedan har de emigrerat och lever i länder som Europa, Kanada, Amerika och Australien.

**பின்லாந்து:**

Monet Eelamilaiset ovat muuttaneet 1980-luvun jälkeen Euroopan maihin. Syynä tähän oli singalilaisen hallituksen tamili väestöä vastaan toteuttama kansanmurha. Saksan Priman nagarissa pidetyn kansan tuomioistuimen tuomio on myös vahvistanut tamili väestön kansanmurhan. Yliopisto-opiskelijat, miehet, naiset, lapset ja vanhukset kärsivät paljon tästä rasismista. Monet menettivät kotinsa- Siten Eelamilaiset muuttivat ensin Intiaan. Myöhemmin he muuttivat Euroopan maihin, Kanadaan, Yhdysvaltoihin, Australiaan jne.

தமிழ்:

(5 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பண்டைத்தமிழர் வாழ்வியல்
2. பிரித்தானியர் ஆட்சிக்குப் பிற்பட்ட ஈழத்தமிழர் வரலாறு
3. புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்குக் கலைகளின் பங்களிப்பு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- தமிழர் கலைகள்
- கலைத்திறன்களை வெளிப்படுத்தும் முறைகள்
- கிடைக்கும் நன்மைகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

உலகில் மாந்தர் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு கலை வெளிப்படுகிறது. கலையானது வாழ்வியல், பண்பாடு சார்ந்த நெறிகள் பலவற்றை வெளிப்படுத்துகிறது. இது மக்களை ஈர்க்கும் தன்மை வாய்ந்தது. கலைகள் நாட்டுப்புறக் கலைகள், செவ்வியற் கலைகள் எனும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. எனினும், நாட்டுப்புறக் கலைகளே எல்லாவற்றுக்கும் ஆணிவேராக அமைகின்றன. நாட்டுப்புறக் கலைகளுள் கூத்து என்னும் கலை வடிவம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது என்பதற்குச் சங்ககால இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதையில் மாதவி பதினொரு வகையான கூத்துகளில் சிறந்து விளங்கினாள் எனக் குறிப்பிடப்படுகிறது. ஈழத்தமிழ் இலக்கியங்களிலும் கூத்துக்கலை பற்றிக் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தமிழீழப் பகுதிகளில் கூத்துக்கலையானது இன்றுவரையும் பேணப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் ஆடப்படும் கூத்தின் ஆடல் முறைகள், பாடல் வகைகள் போன்றவற்றை நுட்பமாக ஆராய்ந்தால், இது ஈழத்தமிழரது மரபுவழிக் கலை வடிவம் என்ற உண்மை புலப்படும். தமிழீழ விடுதலைப் போராட்டக் காலங்களில் மக்களை ஆற்றுப்படுத்தும் நோக்குடனும் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் நெறிப்படுத்தப்பட்டு தெருக்கூத்துகள் சிறப்பாக ஆடப்பட்டன. அவை தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பவையாக இருந்தன. களத்தில் காத்தான், சதியை வென்ற சாவுகள், வீரமுரசம், வெள்ளைப்புறா சிவப்பானதேன் போன்றன அவற்றுள் சிலவாகும். தெருக்கூத்துகளில் பாடப்பட்ட பாடல்கள், இசைக் கருவிகள், கதை மாந்தர்கள், முக ஒப்பனை, ஆடை ஒப்பனை போன்ற அனைத்துமே மக்களிடையே தாயக விடுதலை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்தன.

1. மாதவி ஆடிய பதினொரு வகைக் கூத்துகள் பற்றி எந்த நூலில் எக்காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

2. கலைகள் எவற்றை வெளிப்படுத்துகின்றன? (1 புள்ளி)

______________________________________________

______________________________________________

3. தமிழீழப் பகுதிகளில் தெருக்கூத்துகள் ஆடப்பட்ட நோக்கங்கள் எவை? (2 புள்ளிகள்)

4. அங்கு ஆடப்பட்ட தெருக்கூத்துகளுள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

5. தெருக்கூத்துகளில் பாடப்பட்ட பாடல்கள், முக ஒப்பனை போன்றவை எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தின? (1 புள்ளி)

6. எல்லாக் கலைகளுக்கும் ஆணிவேராக அமைந்த கலை எது? (1 புள்ளி)

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- நூல் வெளியீடு
- அரிய நூல்களின் அணிவகுப்பு
- கவிதைத் தொகுப்பு வெளியீடு
- தங்கம் வென்ற தமிழ் மகளே வருக!

1. ____________________

வாசகப் பெருமக்களே! கிடைத்தற்கு அரிய பல நூல்களைப் பார்வையிடவும் வாங்கிக்கொள்ளவும் ஓர் அரிய வாய்ப்பு. மலைமகள் இலக்கியக் கழகத்தினால் நூற்கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது. தாயக விடுதலைப் போராட்டக் காலங்களில் படைக்கப்பட்ட பல பெறுமதிவாய்ந்த நூல்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம். இக்கண்காட்சி 25.06.2023 அன்று 9:00 - 17:00 மணிவரை நடைபெறும். குறைந்தளவு நூல்களே கையிருப்பில் உள்ளன. விரைந்து வாரீர்!

2. ____________________

ஒலிம்பிக்கில் பளு தூக்கும் போட்டியில் கலந்துகொண்டு முதற்பரிசான தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார் வீரப்பெண் சுடர்விழி. தாயகத்துக்குப் பெருமை தேடித் தந்த சுடர்விழிக்குப் பாராட்டுவிழா நடத்த தமிழர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இப்பாராட்டு விழா எதிர்வரும் 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று வானதி கலையரங்கில் நடைபெறும். வீரப்பெண்ணைப் பாராட்ட அணிதிரண்டு வாருங்கள்!

3. ____________________

இலக்கிய ஆர்வலர்களே! புலம்பெயர் நாடுகளின் எழுத்தாளர்கள் பலர் ஒன்றிணைந்து புதிய முயற்சியாக எமது இணையத்தளத்தில் புதினம் ஒன்றை எழுதி வந்தார்கள். இது நீங்கள் அறிந்ததே. கிழமைதோறும் தொடராக எழுதப்பட்டு வந்த புதினத்தை, பலரும் பயன்பெறும் வகையில் தமிழ்வேள் வெளியீட்டகம் நூல் வடிவில் வெளியீடு செய்யவுள்ளது. அந்நூலை வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்! எமது எழுத்தாளர்களை ஊக்குவியுங்கள்!

(3 X 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |